# கணக்கீடு

## பயிற்சி வினாக்கள்

10.5.2, 10.5.3



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## பயிற்சி வினாக்கள் 10.5.2

தேவி, சோதி என்போர் பின்வரும் உடன்படிக்கையின் கீழ் பங்குடைமையொன்றை நடாத்தி வருகின்றனர்.

- மாதாந்த சம்பளம் முறையே தேவி சோதி என்போர் முறையே ரூ.40000, ரூ.20000 செலுத்தப்படுகின்றது
- மூலதனத்திற்கு மாதாந்த வட்டியாக மீதிக்கு 1.25%
- இலாப நட்டங்கள் தேவி, சோதி ஆகியோருக்கிடையில் சமனாக பகிரப்படும்
- பங்குடைமையினால் செய்யப்படும் பங்காளர் சொந்தச் செலவுகள் பங்காளர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரதி என்பவர் 01.04.2018 இல் புதிய பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார். இவர் சேரும்போது ரூ.1500000 காசாகவும் ரூ.1000000 ஒப்புக்கொண்ட விலையான மோட்டார் வாகனத்தையும் பங்குடைமைக்கு கொண்டுவந்துள்ளார். அதன் பின்னர் எல்லாப் பங்காளர்களும் இலாபநட்டங்களை சமனாக பகிர ஒப்புக்கொண்டார். 01.04.2018 இல் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ.120000 நன்மதிப்பை சொத்தொன்றாக கருதப்படாது. இது தொடர்பான சீராக்கங்களை பங்காளர் மூலதன கணக்குகளில் செய்யப்பட வேண்டும். 31.03.2019 இல் உள்ளவாறான காசுப்புத்தக சுருக்கம் வருமாறு

| | 000 | 000 |
|---|---|---|
| 01.04.2018 இல் மீதி | | 300 |
| பெறுவனவுகள் | | |
| கடன்பட்டோரிடம் சேகரிப்பு | 7000 | |
| ரதி மூலதனம் | 1500 | |
| வங்கிக்கடன் | 100 | 8600 |
| கொடுப்பனவுகள் | | 8900 |
| கடன்கொடுனருக்கான கொடுப்பனவு | 5200 | |
| செலவுகள் | 1200 | |
| உபகரணம் | 600 | |
| சம்பளம் - தேவி | 400 | |
| சோதி | 200 | |
| மூலதன வட்டி - தேவி | 150 | |
| சோதி | 100 | |
| பற்று - சோதி | 120 | |
| சோதியினால் செய்யப்பட்ட பிரயாணச் செலவு மீளளிப்பு | 20 | |
| தேவியின் வீட்டு மின்சாரக் கொடுப்பனவு | 40 | |
| தேவி பிள்ளையின் தனியார் வகுப்பு கட்டணம் | 10 | |
| எரிபொருள் மீள்கொடுப்பனவு - தேவி | 25 | |
| சோதி | 70 | **8135** |
| 31.03.2019 இல் மீதி | | 765 |

**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மேலதிக தகவல்கள்

01.04.2018 இல் மொத்த உரிமையாண்மை மூலதனக் கணக்கு மீதிகள்

| | தேவி 000 | சோதி 000 |
|---|---|---|
| மொத்த உரிமையான்மை | 3000 | 2800 |
| மூலதனம் | 2200 | 3000 |

- 31.03.2019 இல் வங்கிக் கடனுக்கு வட்டி ரூ.20000 செலுத்த வேண்டும்
- வருடத்திற்க்கான ஆதனம் பொறி உபகரணத் தேய்வு 120000
- 01.04.2018 இல் உள்ள பொறுப்பு மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் (காசு தவிர)

| | 000 |
|---|---|
| கடன் கொடுனர் | 240 |
| சென்மதிச் செலவு | 20 |
| சரக்கிருப்பு | 210 |
| கடன்பட்டோர் | 340 |
| முற்கொடுப்பனவு | 10 |
| வங்கிக்கடன் | 800 |

- 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொறுப்பு மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் (காசு, சென்மதி வட்டி தவிர்ந்த) என்பவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு

| | 000 |
|---|---|
| கடன் கொடுனர் | (40) |
| சென்மதிச் செலவு | 15 |
| சரக்கிருப்பு | (20) |
| கடன்பட்டோர் | 60 |
| முற்கொடுப்பனவு செலவு | 8 |

**வேண்டப்படுவது**

1. 31.03.2019 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று
2. பங்காளரிடையே இலாபம் நட்டம் பகிரப்படுவதனை காட்டும் கூற்று
3. பங்காளர் நடைமுறைக் கணக்கு
4. 31.03.2019 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி வினாக்கள் 10.5.3

- ரமனி மதனி ராகினி என்போர் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பங்குடைமையை நடாத்துகின்றனர்
- எல்லாப்பங்காளருக்கும் ஆரம்ப மூலதன மீதி மீது 10% வட்டி
- இலாபநட்டங்கள் முறையே 5:3:2
- ரமனிக்கும் மதனிக்கும் ஆண்டுச் சம்பளம் முறையே ரூ.240000, ரூ.120000
- பங்குடைமையின் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்க்கான இலாபமானது ரூ.480000 ஆக இருந்தது. எனினும் அதனைத்தொடர்ந்து கணக்கீட்டு பதிவுகள் பின்வரும் வழுக்கள் வெளிக்கொண்டு வரப்பட்டது

1. மின்சாரத்திற்க்கு செலுத்திய ரூ.240000 ஆனது மின்சாரக் கணக்கில் ரூ.420000 ஆக வரவு வைக்கப்பட்டுள்ளது
2. வங்கிக்கடனுக்கு செலுத்திய வட்டி ரூ.200000 ஆனது வட்டி வருமானக் கணக்கில் ரூ.20000 ஆக செலவு வைக்கப்பட்டுள்ளது.
3. 01.10.2018 இல் ரூ.400000 கொள்வனவு செய்யப்பட்ட காரியாலய உபகரணம் காரியாலய செலவுக்கணக்கில் ரூ.40000 ஆக பதியப்பட்டுள்ளது. (காரியாலய உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% தேய்விடப்படும்)
4. மதனின் ஆயுள் காப்புறுதி செலவீனம் ரூ.250000 ஆனது பங்குடைமையினால் செலுத்தப்பட்டதுடன் இது நிறுவன காப்புறுதிச் செலவாக பதியப்பட்டது
5. கடன்பட்டோரிடம் பெற்று வங்கியிலிடப்பட்ட ரூ.400000 காசோலை மறுக்கப்பட்டது இம்மறுத்தல் பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை (கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்படுகின்றது)

31.03.2019 இல் ராகினி பங்குடைமையிலிருந்து இளைப்பாறினார் இத்திகதியில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ.2000000 ஆக பதிப்பிடப்பட்டது கணக்கு புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு சீராக்கப்படுவதில்லை எல்லாச் சீராக்கங்களும் மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்படல் வேண்டும். ராகினிக்கு செலுத்த வேண்டிய தொகை பங்குடைமைக்கு கடனாக பராமரிப்பதற்க்கு இணங்கப்பட்டுள்ளது. ரமனியும் மதனியும் இலாப நட்டங்களை முறையே 3:2 என பகிர சம்மதித்தனர்

01.04.2018 இல் உள்ள பங்காளர் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள்

| | மூலதன கணக்கு 000 | நடைமுறை கணக்கு 000 |
|---|---|---|
| ரமனி | 4000 | 800 |
| மதனி | 3000 | 600 |
| ராகினி | 2000 | (200) |

**வேண்டப்படுவது**

1. வழுக்களைத் திருத்த நாட்குறிப்பு பதிவுகள்
2. 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சரியான இலாபத்தைக் காட்டும் கூற்று
3. 31.03.2019 இல் உள்ளவாறான பங்காளர் மூலதன நடைமுறைக் கணக்குகள்

**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk